**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .117/2016** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : பிரேம் ஆனந்த் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused  Present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.10.2024

---

**முதல் விசாரணை:**

நான் உத்தப்பநாயக்கனூர் பஞ்சாயத்து டேவிட்பண்ணையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அரசுத்தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 2011ம் ஆண்டு எதிரியிடம் வட்டிக்கு ரூபாய் 1 லட்சம் கடனாக பெற்றிருந்தேன். நான் வாங்கும் போது வட்டியை பற்றி எதிரி சொல்லவில்லை. பணம் பெறும்போது 10ரூபாய் வட்டி கட்ட வேண்டுமென்றும் என்னிடம் சொன்னார். நான் எனது சூழ்நிலை காரணமாக பணம் தேவை என்பதாலும் 10 ரூபாய் வட்டி பரவாயில்லை என்று நான் வாங்கிவிட்டேன். 2012 ஜனவரி மாதம் வரை 10 ரூபாய் வட்டி வீதம் எதிரியிடம் வட்டி பணம் செலுத்தி வந்தேன். அதற்கு மேல் என்னால் செலுத்த முடியவில்லை. எனக்கு சொந்தமான உத்தப்பநாயக்கனூர் பஞ்சாயத்திற்குட்பட்ட 25 செண்டு வீட்டுமனையை கடந்த 16.07.2012ம் தேதி வற்புறுத்தி மிரட்டல் விடுத்து 5 லட்ச ரூபாய்க்கு ஈடாக பதிவு செய்து கொண்டார்.

2. நான் வாங்கியது 1 லட்ச ரூபாய் தான். அதன்பிறகு நான் உசிலம்பட்டிக்கு வரும்போதெல்லாம் என்னை தொந்தரவு செய்து தகாத வார்த்தையால் பேசி என்னை தொடர்ந்து எதிரி கிரையம் செய்து கொடுக்க சொல்லி தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தார். நான் அரசியல் கட்சி அண்ணா தி.மு.காவில் மாவட்ட அம்மா பேரவை தலைவராக இருந்துவருகிறேன். உசிலம்பட்டி முன்னால் சேர்மேனாக இருந்தேன். நான் தற்போது வழக்கறிஞராகவும் பணி செய்து வருகிறேன். கடந்த 10.01.2015அன்று அரசின் கொள்கை விளக்க துண்டு பிரச்சார கூட்டம் உசிலம்பட்டி முருகன் கோவில் அருகில் காலை 11.00 மணிக்கு

நடைபெற்றது. அந்த பிரச்சாரம் முடிந்து வெளியே வரும்போது எதிரியுடன் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 5 நபர்களுடன் சேர்ந்து வந்து எனது காரை வழிமறித்து தகாத வார்த்தையில் தேவிடியா மகனே என்று சொல்லி என்னை கொலை செய்ய முயற்சி செய்தனர். சம்பவத்தை எனது கிராமத்தை சேர்ந்த கிளை செயலாளர் காளிமுத்து (தற்போது இறந்துவிட்டார்) முருகன் ஆகியோர் இருந்தார்கள். அங்கிருந்து என்னை மேற்சொன்ன நபர்கள் தான் காரில் பாதுகாப்பாக ஏற்றி மதுரைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் ஈடு செய்து கொடுத்த பத்திரம் எதிரியிடம் தான் உள்ளது. சொத்தின் உரிமையும் அனுபவமும் என்னிடம் தான் உள்ளது. நான் மதுரைக்கு சென்று மாவட்ட கண்காணிப்பாளரிடம் இந்த புகார் மனுவை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் புகார்மனுவை கம்பியூட்டரில் டைப் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார்மனுவை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அந்த புகார் மனு யாருக்கு கொடுத்ததாக டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் உசிலம்பட்டி மாவட்ட துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புகாரில் பரிகாரத்தில் காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது எழுத்து பிழையாக இருக்கலாம். 2011 ம் வருடம் எந்த மாதம் கடன் வாங்கினேன் என்றால் மாதம் எனக்கு ஞாபகமில்லை. எனது புகார்மனுவில் எந்த மாதம் கடன் வாங்கினேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2012ம் ஆண்டு வரை எத்தனை மாதங்கள் 10 ரூபாய் வட்டி கொடுத்தேன் என்றால் சுமார் 7 மாதங்கள் கொடுத்தேன்.

4. நான் எது புகார் மனுவில் 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் கடன் வாங்கினேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இருக்கலாம் எனக்கு ஞாபகமில்லை. எனது புகாரின்படி நான் 1 மாதம் தான் வட்டி கொடுத்திருக்க முடியும் என்றால் 2012ம் ஆண்டு ஜீன் மாதம் வரை வட்டி கொடுத்துள்ளேன். எதிரியிடம் நான் கடன் வாங்கும்போது என்ன வட்டி என்று சொல்லவில்லை என புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் புகாரில் 10ரூபாய் வட்டி என குறிப்பிட்டுள்ளேன். நான் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை ஒன்றிய சேர்மேனாக இருந்தேன் என்றால் 2002 முதல் 2006 வரை உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய சேர்மேனாக இருந்தேன். எனக்கும் எதிரிக்கும் எவ்வாறு பழக்கம் என்றால் அரசு

ஒப்பந்தக்காரராக இருந்தார் அதன் மூலம் எனக்கு பழக்கம் . இந்த புகார் சமந்தமாக சார்பு ஆய்வாளர் அல்லது ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை விசாரிக்கும்போது நான் யாரிடம் புகார் கொடுத்ததாக சொன்னேன் என்றால் உசிலம்பட்டி DSP யிடம் புகார் கொடுத்ததாக சொன்னேன். SP இடமும் புகார் கொடுத்திருந்தேன். நான் யாரிடம் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அதுபற்றி அவர்கள் சொல்லவில்லை. நான் கொடுத்த புகார் மனுவில் குறிப்பாக எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. உசிலம்பட்டி முருகன் கோவிலிருந்து நகர் காவல் நிலையம் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் துாரம் இருக்கும்.

5. எதிரி என்னிடம் 16.07.2012ம் தேதி என்னை மிரட்டி ஈடு பத்திரம் எழுதியது தொடர்பாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அதற்காக தான் 2015 ம் ஆண்டு புகார் கொடுத்தேனா என்றால் தொடர்ச்சியாக எனக்கு தொந்தரபு கொடுத்து வந்ததால் தான் வேறு வழியில்லாமல் நான் புகார் கொடுத்தேன். 2012 முதல் 2015 வரை எதிரி என்னை தொடர்ச்சியாக தொந்தரவு கொடுத்தது சமந்தமகாக வேறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் 10.01.2015ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நடந்தது. காலை 11.00 மணியளவில் சம்பவம் நடந்தது என எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்த இடத்தில், எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அதனால் தான் தற்போது ஞாபகமில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் நான் புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை, 13ம் தேதி கொடுத்ததாக ஞாபகம். நான் புகாரை எதற்காக 4 நாட்கள் கழித்து கொடுத்தேன் என்றால் மனஉளைச்சலின் காரணமாகவும் என்னை கொலை மிரட்டல் விடுத்ததாலும் அலைகழிப்பில் தாமதமாக புகார் கொடுத்தேன். நான் சொல்லும் 1 லட்ச ரூபாய் தவிர எதிரியிடம் வேறு எதுவும் பணம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் இந்த சம்பவம் நடந்திருந்தால் அன்றையே தேதியிலேயே நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் எதிரி ஈடுகடனுக்காக கொடுத்த 5 லட்ச ரூபாயை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நான் தயார் செய்து இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை எதிரியை நான் சொல்வது போல் 5 நபர்களுடன் சொன்ன தேதியில் வந்து வழிமறிக்கவில்லை மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல.

S.d./Prem Anand
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.